# ஈரோடு மாவட்டம்
# பாசூர்(முதல்நிலை)பேரூராட்சி

**ந.க.எண்.65 /2021** **நாள்.23.05.2022**

**நமக்கு நாமே திட்டம் 2021–2022 (NNT) 2021–2022**

**1998ம் வருடத்திய தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம்**
**தமிழ்நாடு சட்டம் 43/1998) விதிமுறைகளின் படி அறிவிக்கப்படும்**
**குறுகிய கால மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

ஈரோடு மாவட்டம், பாசூர் பேரூராட்சி பகுதியில் கீழ்க்காணும் வேலைகளைச் செய்து முடிக்க தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன.

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பாசூர் பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் 01.06.2022–ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பாசூர் பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டு உறை முறையில், மூடி முத்திரையிடப்பட்டு, மேல் உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், ஒப்பந்தப்புள்ளி தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 01.06.2022–ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பேரூராட்சியில் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும். வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 01.06.2022–ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை **http://www.tenders.tn.gov.in** மற்றும் **http://townpanchayats.tn.gov.in/tender** என்ற இணையதள முகவரிகளில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அல்லது பட்டியலில் கண்டுள்ள தொகைக்கான வங்கி வரைவோலை அல்லது வங்கி கொடு ஆணை சமர்ப்பித்து பாசூர் பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளிகளை கணினி மூலமே பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து மின்னணு பரிவர்த்தனை மூலம் கையொப்பமிட்டு கணினி வழியாகவே அனுப்பலாம். அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பாசூர் பேரூராட்சி அலுவலகத்தில் நேரிடையாக ஒப்படைக்கலாம்.

ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் மற்றும் நிபந்தனைகள் குறித்தான விளக்கக்கூட்டம் 27.05.2022ம் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் பாசூர் பேரூராட்சி அலுவலகத்தில் நடைபெறும்.

ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள், ஒவ்வொரு வேலைக்கும் செலுத்த வேண்டிய டேவணித் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டால் செலுத்தப்பட வேண்டிய காப்புத் தொகை மற்றும் இதர விபரங்கள் இவ்வலுவலகத்தில் வேலை நாட்களில் வேலை நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**வேலைப் பட்டியல்**

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்த தொகை (ரூ) | ஷெட்யூல் படிவம் கிரயத் தொகை | ஒப்பந்தப் புள்ளி டேவணித் தொகை (ரூ) 2 சதவிகிதம் | வேலை செய்து முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | Providing BT Road at ward No:4 Parisal Thurai Veethi in Pasur Town Panchayat | ரூ.33,10,000/- | ரூ.9360/- | ரூ.66,200/- | 180 நாட்கள் |



**Bidder's Signature**

## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1. ஒப்பந்ததாரர்கள் இப்பேரூராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரராக இருக்க வேண்டும். மற்றும் இதர துறைகளில் ஒப்பந்ததாரராக இருந்து அவர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்தால் ஒப்பந்ததாரராக உடன் பேரூராட்சியில் உரிய ஆவணங்களைக் கொடுத்து பதிவு செய்ய வேண்டும்.
2. ஒவ்வொரு வேலைக்கும் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகை செலுத்திய வங்கி வரைவோலை அல்லது வங்கி கொடு ஆணை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும், எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
3. செலுத்தப்படும் டேவணித் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்பட மாட்டாது. ஒவ்வொரு வேலைக்கும் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகையில் ஒப்பந்தப்புள்ளி வழங்கப்படுவதற்கு முன்பு 1 சதவீதமும், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில் மீதம் 1 சதவீத வைப்புத் தொகை செலுத்த வேண்டும்.
4. ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைக்குள் வைத்து உறையின் மீது எந்தவேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், ஒப்பந்தப்புள்ளி தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி செயல் அலுவலர், பாசூர் பேரூராட்சி என்ற முகவரியிட்டு, கொடுக்க வேண்டும். உறையில் ஒப்பந்ததாரரின் முழு அஞ்சல் முகவரி இருக்க வேண்டும்.
5. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையோ எவ்வித காரணம் கூறாமல் ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ இப்பேரூராட்சி மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.
6. ஒப்பந்ததாரர் தம்மால் அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை எவ்வித காரணமும் இல்லாமல் விலக்கிக்கொண்டால் (ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்பவர் முடிவு செய்ய வேண்டும்) அவரால் பின்னர் அளிக்கும் ஒப்பந்தப்புள்ளிகளை எவ்வித காரணமும் இன்றி நிராகரிக்க நேரிடும்.
7. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர்களுக்கு விதிமுறைகளை அனுசரித்து வேலை உத்திரவு வழங்கப்படும்.
8. ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வேலை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் அதற்குரிய படிவத்தில் ரூ.100/– மதிப்புள்ள முத்திரைத் தாளில் உடன்படிக்கை எழுதித் தர வேண்டும்.
9. வேலை உத்திரவில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடித்துக் கொடுக்க வேண்டும். இல்லையேல் வேலையை ரத்து செய்யவும், அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் எல்லா இழப்புக்கும் ஒப்பந்தக்காரர்களே பொறுப்பாவார்கள்.
10. ஒப்பந்தப்புள்ளி கொடுத்த பின்பு, பின்வாங்கும் ஒப்பந்ததாரர்களின் டேவணித் தொகையும், நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றாத ஒப்பந்ததாரர்களின் வைப்புத் தொகைகளும் எவ்வித அறிவிப்பும் இன்றி பறிமுதல் செய்யப்படும்.
11. குறிப்பிட்ட தேதிக்குள் வேலையை ஆரம்பிக்காவிட்டால் ஒப்பந்தக்காரர் அவ்வேலைக்கென செலுத்தப்பட்ட டேவணித் தொகையை பறிமுதல் செய்ததாகக் கருதப்பட்டு, பேரூராட்சியின் நிதியில் சேர்க்கப்படுவதுடன் அவ்வேலைக்கு மீண்டும் வேறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு வேலை செய்து முடிப்பதில் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும், முந்தைய ஒப்பந்தக்காரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.
12. சாலை வேலைகளை பொருத்த வரையில் கிராவல் மற்றும் ஜல்லி சேகரத்திற்கு மட்டும் தொகை பட்டுவாடா செய்யப்படமாட்டாது. பரத்தல் வேலையை நல்ல முறையில் செய்து வேலையை முழு அளவில் செய்து முடித்த பின்னர்தான் முழுத் தொகையையும் பட்டுவாடா செய்ய இயலும்.
13. ஒப்பந்ததாரர்களே சிமெண்ட் மற்றும் தார் (80/100 மற்றும் Emulsion) வாங்கிக் கொள்ள வேண்டும். இதன் பொருட்டு, வேலைகள் பாதிக்கப்படக்கூடாது. இதற்கு சம்மதம் அளிக்கும் நபர்கள் மட்டுமே டெண்டர் கொடுக்க வேண்டும். சிமெண்ட் மற்றும் தார்க்கு தரச்சான்று, வேலை முடித்ததற்கான பட்டியலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
14. கட்டுமான வேலைக்கென சேகரம் செய்யப்படும் பொருள்கள் பொறியாளரால் நிராகரிக்கப்பட்டால், ஏழு தினங்களுக்குள் அப்பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்வதுடன், பொறியாளரால் ஏற்றுக் கொள்ளப்படும் வகையில் தரம் வாய்ந்த மாற்றுப் பொருட்களை வேலை நடக்கும் இடத்தில், ஒப்பந்தக்காரர் சேகரித்தல் வேண்டும். தவறினால் நிராகரிக்கப்பட்ட பொருட்கள், பேரூராட்சிப் பொருட்களாக கருதி அப்புறப்படுத்தப்படும்.
15. வேலைக்கு பயன்படுத்தும் பொருள்களுக்கு ISI தரச்சான்று பெற்று அனைத்தும் உதவிப்பொறியாளர் அவர்களின் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும்.



**Bidder's Signature**

16. இப்பணிகளில் தரைமட்ட பணிகள் மேற்கொள்ளும் போது குடிநீர் திட்ட குழாய்கள் மற்றும் தொலை தொடர்பு கேபிள்கள் பழுதுபட்டால் ஒப்பந்ததாரரே தனது சொந்த செலவில் பழுது நீக்கம் செய்து துறைக்கு ஒப்படைக்கப்பட வேண்டியது பேரூராட்சி நிர்வாகம் இதற்கு பொறுப்பேற்காது.

17. கட்டுமான வேலைக்கு தேவைப்படும் தண்ணீரை ஒப்பந்ததாரரே ஏற்பாடு செய்துக்கொள்ள வேண்டும். அனுமதியின்றி பேரூராட்சி பொதுக்குடிநீர் குழாயிலிருந்தோ அல்லது இதர குடிநீர் ஆதரங்களிலிருந்தோ வேலைக்கு தண்ணீர் பயன்படுத்துவது கண்டறியப்பட்டால் மொத்த வேலையின் மதிப்பில் 1 சதவீதம் தண்ணீர் பயன்படுத்தியதற்காக பட்டியலில் பிடித்தம் செய்துகொள்ளப்படும்.

18. யாருடைய ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படவில்லையோ அவரால் செலுத்திய டேவணித்தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பிக் கொடுக்கப்படும்.

19. வேலையை முடித்த பின்னர் பட்டியல் கீழ்க்காணும் தொகைகள் கழித்துக் கொள்ளப்பட்டு, மீதித் தொகையை மட்டும் பட்டுவாடா செய்யப்படும்.

| வ எண் | விபரம் | பிடித்தம் செய்யும் அளவு |
|---|---|---|
| 1 | கூடுதல் வைப்புத்தொகை | 3% |
| 2 | வருமான வரித்தொகைப் பிடித்தம் | 2% |
| 3 | வருமானவரி மேல்வரி | 10% |
| 4 | கல்வி வரி (வருமானவரிக்கு) | 3% |
| 5 | சரக்கு மற்றும் சேவை வரி (GST) | 2% |
| 6 | நிறுத்தி வைக்கப்படும் தொகை | 5% |
| 7 | கட்டுமான தொழிலாளர் நல நிதி | 1% |

நிறுத்தி வைக்கப்படும் தொகை தார்சாலைகளுக்கு ஒரு வருடத்திற்கு பின்னரும் கான்கீரிட் சாலைகளுக்கு இரண்டு வருடங்களுக்கு பின்னரும் திருப்பி வழங்கப்படும். வட்டி ஏதும் வழங்கப்பட மாட்டாது.

20. தொடர்புடைய வேலைகளுக்கான பட்டியல் தணிக்கை செய்யப்பட்டு தணிக்கைத் தடைஏதும் இல்லையென முடிவு தெரிந்த பின்னர்தான் அவ்வேலைகளுக்கான ஒப்பந்தக்காரரால்செலுத்தப்பட்ட டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பித் தரப்படும்.

21. வேலைகள் சம்பந்தமான அவ்வப்போது அரசினரால் வெளியிடப்படும் உத்திரவுகளுக்கு உட்பட்டு ஒப்பந்தக்காரர்கள் வேலைகள் செய்ய வேண்டும்.

22. ஒப்பந்ததாரருக்கு ஒப்படைக்கும் பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் துறை நடவடிக்கையான அபராதம் மற்றும் ஒப்பந்தம் ரத்து செய்வதை ஒப்பந்ததாரரால் தவிர்க்கப்படல் வேண்டும்.

23. வேலை நடைபெறும் இடத்தில் திட்டத்தின் பெயர், வேலையின் பெயர் மற்றும் மதிப்பீட்டுத் தொகை, வேலை உத்திரவு வழங்கிய நாள், வேலையை செய்து முடிக்கும் காலம் மற்றும் ஒப்பந்ததாரர் பெயர் குறித்த அறிவிப்பு பலகை **4 அடி X 2.5 அடி** (1.20 **m** x 0.75 **m**) அளவில் கண்டிப்பாக நடப்பட வேண்டும்.

24. இத்திட்ட சாலைப்பணி முடிக்கப்பட்டவுடன் மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு சாலை பணிகளில் ஏற்படும் குறைபாடுகளை இப்பணியினை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரே தனது சொந்த செலவில் சீரமைத்துக்கொடுக்கப்பட வேண்டும்.

25. **E-Tender** மூலம் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பதிவிறக்கம் செய்து ஒப்பந்ததாரர் மூலம் தரப்படும் ஒப்பந்தப்புள்ளிக்கும் மேற்காணும் அனைத்து நிபந்தனைகளும் பொருந்தும்.

26. திட்டப்பணிக்கு அரசு நிதி மான்யம் பெறப்பட்ட பின்னரே பட்டியல்படி தொகை வழங்கப்படும். பேரூராட்சிப்பங்குத் தொகை பேரூராட்சி நிதிநிலைமை இருப்பை அனுசரித்து வழங்கப்படும்.

**<u>சிறப்பு நிபந்தனைகள்</u>**

1. ஒப்பந்தக்காரர்கள், இரண்டு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். டேவணித் தொகை முன் அனுபவச் சான்றிதழ், ஒப்பந்தக்காரர் தகுதிச் சான்றிதழ் (Class – I) நிதி நிலை அறிக்கை, விற்பனை வரிச் சான்றிதழ் போன்ற விவரங்களை ஒரு உறையில் வைத்து, உறையின் வெளிப்புறத்தில் "Technical Bid" என்று குறிப்பிடப்பட வேண்டும். மற்றொரு உறையில் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவம் வைத்து அவ்வுறையின் வெளிப்புறத்தில் "Price Bid" என்று குறிப்பிடப்பட வேண்டும். இவ்விரண்டு உறைகளையும் மூடி முத்திரையிட்டு மற்றொரு பெரிய உறையில் போட்டு அதனையும் மூடி முத்திரையிட்டு அவ்வுறையின் மேல்



**Bidder's Signature**

வேலையின் பெயர், மதிப்பீடு, Package No. ஒப்பந்தப்புள்ளி நாள், ஒப்பந்ததாரர் பெயர் போன்ற விபரங்கள் தெளிவாக எழுதப்பட வேண்டும். இதில் முதலில் “Technical Bid” என்று குறிப்பிட்டுள்ள உறை பிரிக்கப்பட்டு, அதில் வைக்கப்பட்டுள்ள சான்றிதழ்கள் ஒப்பந்தப்புள்ளி கட்டுப்பாட்டின்படி தேவையான விவரங்கள் தகுதியாக இருந்தால் மட்டுமே “Price Bid” என்று குறிப்பிடப்பட்டிருக்கும் இரண்டாவது உறை திறக்கப்படும். அவ்வாறு ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின் படி தகுதியானதாக இல்லையெனில் “Price Bid” உறை திறக்கப்படாமலே நிராகரிக்கப்படும்.

2. ‘‘Technical Bid” உறையில் வைக்கப்பட வேண்டியவை

3) ஒப்பந்ததாரர்கள் கட்டுமானப்பணிகள் மற்றும் சாலைப்பணிகள் செயல்படுத்துவதில் 5 ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்கள் என்பதற்கான சான்று

4) ஒப்பந்ததாரர்கள் கடந்த 3 ஆண்டுகளில் கட்டுமானப்பணிகள் மற்றும் சாலைப்பணிகள் செயல்படுத்தியதில், தற்போது கோரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பில் 50% சதவீதத்திற்கு மேல் ஒரே பணியில் செயல்படுத்தியமைக்கான சான்று

5) ஒப்பந்ததாரர்கள் கடந்த 3 ஆண்டுகளில் தொடர்ச்சியாக செயல்படுத்திய வேலைகளுக்கான மதிப்பு தற்போது கோரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பில் 50% சதவீதத்திற்கு அதிகமாக உள்ளது என்பதற்கான சான்று

6) ஒப்பந்ததார் தற்போது கோரும் ஒப்பந்தப் பணிக்கான மதிப்புத் தொகையில் 15% சதவீதத்திற்கு அதிகமான தொகையை வங்கி இருப்பாக வைத்துள்ளமைக்கான வங்கி பாஸ் புத்தக நகல் அல்லது வங்கி மேலாளர் சான்று

7) தார்சாலை மற்றும் காங்கீரிட் சாலை பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி தருபவர்கள் அந்தந்த பணிகளுக்கு தேவையான கீழ்க்காணும் இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் சொந்தமாக உள்ளமைக்கான சான்றுகள் இணைக்க வேண்டும். அல்லது கீழ்க்காணும் இயந்திரங்கள் மற்றும் வாகனங்களின் உரிமையாளர்களிடம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டமைக்கான Lease Agreement நகலினை இணைக்க வேண்டும். மேலும், உரிமையாளர்களின் வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் தொடர்பான R.C. புக் போன்ற ஆவணங்களின் நகல்களை இணைக்க வேண்டும்.

| | Name of the Equipment | Quantity |
|---|---|---|
| | **For BT Roads** | |
| 1 | Central Mixing  Plant | 1 Nos |
| 2 | Paver Machine | 1 No. |
| 3 | Water Lorry | 2 No. |
| 4 | Tipper Lorry | 4 Nos. |
| 5 | Vibrator Roller | 1 Nos. |
| 6 | Stadic roller | 1 Nos. |
| 7 | Vehicle Mounted Mechanical Sprayer | 1 No. |
| | **For CC works** | |
| 1 | Concrete Mixers | 3 Nos |
| | (or) | |
| | Mobile Batching Plant | 1 No. |
| 2 | Screed Vibrator | 2 Nos. |
| 3 | Water Lorry | 1 No. |

8) ஒப்பந்ததாரர்கள் வருமானவரி மற்றும் சரக்கு மற்றும் சேவைவரி செலுத்தியமைக்கான (Latest GST Return) 5 ஆண்டுகளுக்கு சான்று இணைக்கப்பட வேண்டும்.

9) மேற்காணும் சான்றுகள் அனைத்தும் Notary Public அல்லது செயற்பொறியாளர் பணியிடத்திற்கு குறையாத உயர் அலுவலர்களால் சான்றொப்பம் பெறப்பட்டு சமர்ப்பிக்க வேண்டும்.



**Bidder’s Signature**

10) ஒப்பந்த ஆவணங்கள் மற்றும் நிபந்தனைகளை ஒப்புக்கொண்டமைக்கு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த ஆவணங்களில் ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்து இட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

செயல் அலுவலர்
பாசூர் பேரூராட்சி
ஈரோடு மாவட்டம்

பெறுதல்:

பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள், பாசூர் பேரூராட்சி.

நகல்:

1. ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்ட ஆட்சியரகம், ஈரோடு அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. செயற்பொறியாளர், (பேரூராட்சிகள்) சென்னை அவர்களுக்கு, தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், ஈரோடு மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
5. உதவி செயற்பொறியாளர், (பேரூராட்சிகள்) ஈரோடு அவர்களுக்கு, தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
6. தொகுதி உதவிப்பொறியாளர், அவல்பூந்துறை பேரூராட்சி.
7. செயல் அலுவலர், கொடுமுடி, சென்னசமுத்திரம், ஊஞ்சலூர், கிளாம்பாடி, வெள்ளோட்டம்பரப்பு விளம்பரப்பலகைக்கு ஒட்டி விளம்பரம் செய்ய அனுப்பப்படுகிறது.
8. அலுவலக விளம்பரப்பலகைக்கு,
9. பாசூர் பேரூராட்சி தலைவர் அவர்கள் மேஜைக்கு, தகவலுக்காக.



**Bidder’s Signature**